

# SIVAPURANAM
## MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 48. பண்டாய நான்மறை

(திருப்பெருந்துறையில் அருளியது)

அனுபவத்துக்கு ஐயமின்மை உரைத்தல்

(நேரிசை வெண்பா)



# திருச்சிற்றம்பலம்



பண்டாய நான்மறையும் பால்அணுகா மால்அயனும்
கண்டாரும் இல்லை கடையேனைத்-தொண்டாகக்
கொண்டருளுங் கோகழிஎம் கோமாற்கு நேஞ்சமே
உண்டாமோ கைம்மாறு உரை

1





உள்ளமல மூன்றும் மாயஉகு பெருந்தேன்
வெள்ளம் தரும்பரியின் மேல்வந்த-வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவுங் கெடும்பிறவிக் காடு





காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டில் பரிப்பாகன் நம்வினையை-வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்
மருளும் கெடநெஞ்சே வாழ்த்து





வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாரும்
தாழ்ந்துஉலகம் ஏத்தத் தகுவாரும்-சூழ்ந்துஅமரர்
சென்றிறைஞ்சி ஏத்தும் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி ஏத்தும் நமர்

4





நண்ணிப் பெருந்துறையை நம்இடர்கள் போய்அகல
எண்ணி எழுகோகழிக்கு அரசைப்-பண்ணின்
மொழியாளோடு உத்தர கோசமங்கை மன்னிக்
கழியாது இருந்தவனைக் காண்





காணும் கரணங்கள் எல்லாம் பேரின்பம்எனப்
பேணும் அடியார் பிறப்புஅகலக்-காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாயாரப் பேசு





பேசும் பொருளுக்கு இலக்கிதம்ஆம் பேச்சுஇறந்த
மாசில் மணியின் மணிவார்த்தை-பேசிப்
பெருந்துறையே என்று பிறப்புஅறுத்தேன் நல்ல
மருந்தின்அடி என்மனத்தே வைத்து



ஸ்ரீ மாணிக்கவாசகர்